**செய்தி வெளியீடு எண்: 639** **நாள்: 25.10.2012**

**செய்தி வெளியீடு**

சுற்றுலா என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உந்துகோலாகவும், ஒருமைப்பாட்டிற்கு உறுதுணையாகவும் விளங்குவதுடன் சுற்றுலா மேற்கொள்பவரின் அனுபவத்தின் மூலம் அறிவை வளர்க்கக்கூடியதாக விளங்குகிறது.

சுற்றுலா நேரடி வேலை வாய்ப்பினை உருவாக்குவதோடு, அதன் மறைமுக தாக்கமாக உள்ளூர் மக்களின் மேம்பாட்டையும் உறுதிப்படுத்துகிறது. சேவைத் துறை என்ற நிலையிலிருந்து, முன்னணி தொழிலாக உருவாகி வரும் சுற்றுலாத்துறைக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு ஆக்கமும், ஊக்கமும், முன்னுரிமையும் அளித்து வருகிறது. உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், சுற்றுலாத் தலங்களை சந்தைப்படுத்துதலுக்கும் ஒரு புதிய ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் கோடை வசிப்பிடங்களில் உதகமண்டலம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இது தமிழ்நாட்டின் மலைகளின் அரசி என்று அழைக்கப்படுகிறது. உதகமண்டலத்தில் சுற்றுலாப் பயணிகளை கவருவது மற்றும் உதகமண்டலத்திற்கு சிறப்பு சேர்த்து வருவது 20 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள ஊட்டி ஏரியாகும். இந்த ஏரியில், ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் ஏரியைச் சுற்றிப் பார்க்கவும், படகுகளில் பயணம் செய்யவும் வருகின்றனர். 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்த ஏரிக்கு கோடப்பமந்து கால்வாய் மூலமாக நீர் வருகிறது. இந்த கால்வாய் நீருடன் கழிவுநீர் கலப்பதாலும், ஆகாயத் தாமரை போன்றவை ஏரியில் வளர்வதினாலும், ஏரியின் நீர் மாசு அடைவதால் இந்த ஏரியில் படகு சவாரி செய்யும் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஊட்டி ஏரியை தூய்மைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி இது குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் மாசுபடுத்தும் காரணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில், மேற்படி ஏரியை சீரமைப்பது தொடர்பான விரிவான செயல் திட்டம் வகுக்கப்பட்டு, அதன்படி இந்த ஏரிக்கு தண்ணீர் கொண்டு வந்து சேரும் முக்கிய கால்வாயான கோடப்பமந்து கால்வாயைத் தூர்வாருதல், ஏரியில் வந்து கலக்கும் சுத்திகரிக்கப்படாத நகரின் கழிவுநீரை முழுமையாகத் தடுத்து சுத்திகரித்தல், நீரேற்று நிலையத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஜெனரேட்டர் உள்ளிட்ட கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தருதல், ஏரியில் தற்போதுள்ள மாசுபட்ட நீரை உயிரியல் ரீதியாகச் சுத்திகரித்தல், நீரில் வளர்ந்துள்ள ஆகாயத் தாமரை போன்ற களைச் செடிகளை அகற்றுதல் மற்றும் நீரின் உயிர் வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை 4 கோடியே 27 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் மூலம் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

மேலும், கழிவுநீர் ஏரியில் கலப்பதை முற்றிலுமாக நிறுத்த ஏற்கெனவே நகராட்சிப்பகுதிகளில் கழிவு நீர் இணைப்புகள் பெறாமல் உள்ள 6,745 வீடுகளும், வணிக நிறுவனங்களும் உடனடியாக கழிவுநீர் இணைப்பு பெற உரிய நடவடிக்கை எடுத்து மூன்று மாத காலத்திற்குள் இணைப்புகளை வழங்க உதகமண்டலம் நகராட்சிக்கு மாண்புமிகு முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். உதகமண்டலம் நகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தில் சேராத ஒன்பது வார்டுகளில் கழிவுநீர் இணைப்புகளை வழங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளையும் விரைவாக முடித்து, அப்பகுதிகளுக்கும் கழிவுநீர் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், இந்த ஏரி அடிக்கடி மாசுபடுவதை தடுத்து, இந்த ஏரியினை தொடர்ந்து மாசுகள் அற்ற தூய்மையான நீரைக் கொண்ட ஏரியாக பராமரிப்பதற்காக நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் பொதுப்பணித்துறை, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்திக்கழகம், மாசுக்கட்டுப்பாடு வாரியம், சுற்றுலாத்துறை, வனத்துறை, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா நிறுவனப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றினை உருவாக்கவும், அதனை ஒரு சங்கமாகப் பதிவு செய்து பணிகளை செயலாற்றுவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், அச்சங்கத்தின் வளர்ச்சிக்காக நிரந்தர நிதியாக, அரசு சார்பில் 50 லட்சம் ரூபாயும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 50 லட்சம் ரூபாயும் முதற்கட்டமாக வழங்கவும், இனி ஆண்டுதோறும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த நிதிக்கு 25 லட்சம் ரூபாய் வழங்கவும், இத்தொகையை வரும் காலங்களில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய்க்கு ஏற்ப அதிகரிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இச்சங்கம், இந்த நிதியைக் கொண்டு, ஏரிக்கு தண்ணீர் வரும் கோடப்பமந்து கால்வாயில் கழிவு நீர் கலக்காமால் பராமரித்தல், சாக்கடைநீர் சுத்திகரிப்பு மற்றும் உதகை ஏரியை அழகுபடுத்துதல் போன்ற சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பல்வேறு பணிகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவரும் உதகை ஏரி மாசுபடாமல் பாதுகாக்கப்படும். இதன் மூலம் இந்த ஏரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வழிகை ஏற்படும்.

*******

வெளியீடு :- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 25.10.2012.